தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
ஆணை எண். 62 /பேரூ/2021

நாள் 02.09.2021

திரு. S. மணிமாறன்,
பனப்பாக்கம், ராணிப்பேட்டை மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பனப்பாக்கம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி, எண்.20/10 காஞ்சீபுரம் ரோடு, பனப்பாக்கம் என்ற முகவரியில் வசிக்கும் திரு.S. மணிமாறன் என்பவரது 27.05.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 1.6.2020ல் பெறப்பட்டு 62/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி, எண்.20/10 காஞ்சீபுரம் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் திரு. எஸ். மணிமாறன் என்பவர் பனப்பாக்கம் பேரூராட்சியில் அனைத்து வேலைகளுக்கும் லஞ்சம் வாங்குகின்றனர் என்றும், செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சியில் குடிநீர்தொட்டி காவலராக பணிபுரியும் D. நிர்மல்ராஜ் இருவரும் இணைந்து பல்வேறு ஊழல்கள், பொய் கணக்குகள் எழுதி பணம் எடுப்பது, பசுமை வீடுகள் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், கொரோனா ஊழல் என்று பல மோசடிகளை செய்கின்றனர் என்றும், ஆண்கள் சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த சிவா என்பவரை செயல் அலுவலருக்கு எல்லா வகையிலும் உதவியாக இருக்கவேண்டுமென திரு. நிர்மல்ராஜ் நியமனம் செய்துள்ளார் என்றும், இதற்கு செயல்

அலுவலர் உடந்தையாக இருந்துவருவதால், ஊழல் புகார் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு மேற்படி நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 04.08.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். முறையீட்டு மனுதாரர் மற்றும் பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

முறையீட்டுமனுதாரர் திரு. S. மணிமாறன் 4.8.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சியில் 2018–19 மற்றும் 2020ம் ஆண்டுகளில் பாரதப் பிரதமர் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு 75 கழிப்பிடங்களை கட்டியுள்ளனர். இதில் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்காக ரூ.8,000/–, பயனாளிகளிடம் ரூ.4,000/– ஆகமொத்தம் ரூ.12,000/– ரூபாயில் மேற்கண்ட கழிப்பிடங்கள் ஒவ்வொன்றும் கட்டப்பட்டுள்ளன. ஆனால், சரிவர கட்டப்படாத மேற்கண்ட கழிப்பிடங்களை பயன்படுத்தப்படாமல், மக்கள் திறந்தவெளி கழிப்பிடத்தையே பயன்படுத்துகின்றனர் என்பதை இம்முறைமன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக அளிக்கின்றேன். மேலும், இதுகுறித்த புகைப்பட நகலினையும் இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். மேலும், மேற்கண்ட பேரூராட்சியில் குடிநீர்தேக்கத் தொட்டி காவலரான திரு. நிர்மல்ராஜ் என்பவர் செயல் அலுவலரின் பெயரைச் சொல்லி லஞ்சம் பெற்று வருகிறார். எனவே, மேற்கண்ட நிர்மல்ராஜ் என்பவர் மீதும் உரிய நடவடிக்கை எடுத்திட இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்த புகைப்படங்களையும் ஆதாரமாக இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்". என்று தெரிவித்துள்ளார்.

3. செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி 4.8.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சியில் 75 கழிப்பிடங்கள் மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்புடனும், பயனாளிகளின் பங்களிப்புடனும் கட்டிமுடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ளவாறு எந்த கழிப்பிடமும் பயனற்று இல்லை என்பதையும் இம்முறைமன்றத்தின்முன் எனது வாக்குமூலமாக பதிவு செய்கிறேன். மேலும், 2.8.2021 நாளிட்ட எனது கடிதத்தில் கண்டுள்ள விவரங்களை எனது விரிவான விளக்கமாக இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

4. செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி அவர்கள் நேரடி விசாரணையின்போது அளித்துள்ள 2.8.2021 நாளிட்ட அறிக்கையில் பனப்பாக்கம் பேரூராட்சியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திட்டமான தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தனிநபர் கழிவறை கட்டும் திட்டம் மத்திய அரசின் மானியம் ரூ.4,000/–, மாநில அரசின் மானியம் ரூ.2,000/–, பேரூராட்சியின் பங்குத்தொகை ரூ.2,000/– மற்றும் பயனாளிகளின்

பங்குத்தொகை ரூ.4,000/– ஆக மொத்த மதிப்பீடு ரூ.12,000/– ஆகும். இதில் அரசு மான்யம் ரூ.8,000/– மட்டும் பேரூராட்சியின் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் ECS மூலம் வழங்கப்படுகிறது. மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ள ரூ.4,000/– என்பது இத்திட்டத்தின் கட்டிடப் பணிக்கு பயனாளியின் பங்குத் தொகையாக சேர்த்து கட்டிடம் கட்டப்படவேண்டும். அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு மாநில மற்றும் மத்திய அரசு மானியமாக ரூ.2,10,000/– நான்கு தவணைகளாக, ஒவ்வொரு தவணைக்கும் பொறியாளரால் அளவுப் புத்தகத்தில் கட்டிடத்தின் பணிகளின் நிலைகளை பதிவுசெய்து Geo Tag எடுத்த பின்பு அதன் அடிப்படையில், பயனாளிகளின் வங்கிக்கணக்கிலேயே ECS மூலம் வழங்கப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். கீழ்காலனி ரோட்டுத் தெருவைச் சேர்ந்த அண்ணாமலை மகன் சேகர் என்பவருக்கு உத்தரவு வழங்கப்பட்டு, பணி நிலைக்கேற்ப தொகைகள் பயனாளியின் வங்கிக்கணக்கில் ECS மூலம் செலுத்தப்பட்டுவருகிறது. அண்ணாமலை மகன் சேகரை நேரடியாக விசாரணை செய்ததில் புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு எவ்வித பணமும் நிர்மல்ராஜ் என்பவருக்கு வழங்கவில்லை என அவர் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். மேலும், கீழ் பணப்பாக்கம் காலனி பெரிய தெருவைச் சேர்ந்த கொள்ளியான் மகன் வெங்கடேசன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிநிலைக்கேற்ப தொகைகள் பயனாளியின் வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டுவருகிறது. அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் வெங்கடேசன் என்பவரின் தம்பி துளசி பயனாளியாக தெரிவு செய்யப்படவில்லை. பட்டா மற்றும் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ள, இடமுள்ள பயனாளிகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு, வீடுகள் கட்ட பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். பனப்பாக்கம் பேரூராட்சி வணிக வளாக கடை எதிரில் அமைந்துள்ள பொது குழாய் அடைப்பு சரிசெய்யப்பட்டுள்ளதென்றும், வாரச்சந்தை மூன்றாண்டுகால தொகுப்பிற்கு குத்தகைக்கு திரு. கோதண்டராமன் என்பவருக்கு விடப்பட்டு, சந்தை வசூல் செய்து வருகிறார் என்றும், அவரை நேரில் விசாரணை செய்ததில் நிர்மல்ராஜ் என்பவர் தனது பாட்னர் இல்லை என்றும், அவர் சந்தை வசூல் ஏதும் செய்வதில்லை என்று எழுதிக்கொடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், பனப்பாக்கம் பேரூராட்சி, தென்மாம்பாக்கம் எல்லைக்குட்பட்ட ஈஸ்வரி நகர் மனைப்பிரிவு உரிமையாளர் திரு. சி. காமராஜ் என்பவர் மனை எண்.11 மற்றும் 12ல் குடியிருப்புடன் கூடிய 4 கடைகளுடன் கட்டடம் கட்டிக்கொள்ள கட்டட அனுமதிவேண்டி 22.8.2019ல் விண்ணப்பம் அளித்து 25.9.2019ல் கட்டட உரிமம் பெற்றுள்ளார். இந்நிலையில், மனை எண்.11 மற்றும் 12ஐ பொதுவில் பிரிக்கப்படாத 1/2 பாகத்தினை திருமதி. நி. யுவராணி (திரு. நிர்மல்ராஜ் என்பவரின் மனைவி) என்பவருக்கு காவேரிப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலக ஆவண என்.3862/2019 நாள் 30.8.2019ல் பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி மனைப்பிரிவு உரிமையாளர் 22.8.2019ல் கட்டட உரிமம் பெற்றிட மனுசெய்துவிட்டு 30.8.2019ல் மனை எண்.11 மற்றும் 12ல் 1/2 பாகம் பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளதை மறைத்து கட்டட உரிமம் 25.9.2019 அன்று பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். திரு. புஷ்பநாதன் தனது மனைவி திருமதி. பு. தக்கம்மாள் பெயரில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் வீடுகட்டிக்கொள்ள Notary Public NOC அளித்துள்ளதன் அடிப்படையில் வீடுகட்டிவருவதாக திருமதி. தக்கம்மாள் என்பவர் தெரிவித்துள்ளதாகவும், அதேபோல் வி. பொன்னுசாமி என்பவரும் தனக்குச் சொந்தமான மனைவரி தோராய பட்டா

இடத்தில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் வீடுகட்டி வருவதாகவும் செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

5. மேலும், பனப்பாக்கம் பேரூராட்சியின் செலவினங்கள் பேரூராட்சி செயல் அலுவலரால் தீர்மானிக்கப்பட்டு, ஊதியம், பிடித்தங்கள், இதர பராமரிப்புச் செலவினங்களுக்கான தொகைகள் காசோலைகளாகவே வழங்கப்படுகிறதென்றும் குறிப்பிட்டுள்ளார். 2018–19ம் ஆண்டில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் திரு. வாசுதேவன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, கட்டட பணிகளின் நிலைக்கேற்ப Geo Tag எடுக்கப்பட்டதன்பேரில் அளவுப் புத்தகத்தில் பதிவு செய்து உதவி செயற்பொறியாளரால் சான்றளிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ.50,000/– + ரூ.50,000/– என இரு தவணைகளாக பயனாளிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், கொரோனா நிதியாக பனப்பாக்கம் பேரூராட்சிக்கு ரூ.7,13,000/– வரப்பெற்று, அத்தொகை கிருமி நாசினி, முகக்கவசம், பொது சுகாதார பொருட்கள் போன்ற தலைப்பின்கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டு UC and CR பேரூராட்சிகள் உதவி இயக்குநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென்றும், கொரோனா காலத்தில் தொண்டு நிறுவனம் மற்றும் அமைப்புகள் மூலம் வரப்பெற்ற நிவாரணங்கள் அந்தந்த அமைப்புகள் மூலம் நிர்வாகத்தின் முன்னிலையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டதாவும், பேரூராட்சியின் சார்பில் வெளிநபர் ஒருவர் சமையலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உணவு சமைத்து உணவு கிடைக்கப்பெறாத நபர்களை கண்டறிந்து பேரூராட்சி மூலம் உணவு வழங்கப்பட்டதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

6. மேலும், திரு. சிவா, த/பெ கிருஷ்ணன் பனப்பாக்கம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் மார்ச் 2020 முதல் நவம்பர் 2020 வரை பணியில் ஈடுபட்டுள்ளார் என்றும், தற்பொழுது இந்நபர் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். திரு. பு. நிர்மல்ராஜ், குடிநீர் தேக்கத்தொட்டி காவலர் பேரூராட்சியின் தனி அலுவலர் அறையில் இருந்தபோது புகைப்படம் எடுக்கப்பட்டு புகார்மனுவில் இணைக்கப்பட்டுள்ளதென்றும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம், செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி அவர்களது வாக்குமூலம், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பாரதப்பிரதமர் திட்டமான தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள 75 கழிப்பிடங்களும் சரிவர கட்டப்படாத நிலையில், மக்கள் திறந்தவெளி கழிப்பிடத்தையே பயன்படுத்துவதாக முறையீட்டு மனுதாரர் தமது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில், செயல் அலுவலர் அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள கழிப்பிடங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது என்றும் எந்த கழிப்பிடமும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு பயனற்று இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர் மேற்படி கழிப்பறை கட்டும் திட்டத்திற்கு ஒவ்வொரு பயனாளியிடமிருந்தும் ரூ.4,000/– லஞ்சமாக திரு. நிர்மல்ராஜ் மூலம் பெறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளதற்கு ஆதார ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், பனப்பாக்கம் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டுவரும் இதர திட்டங்கள் மற்றும்

பணிகள் யாவும் முறையாகவும், அரசு விதிகளின்படியும் எவ்வித பாகுபாடின்றியும் செயல்படுத்தப்பட்டுவருவதாக செயல் அலுவலர் 2.8.2021 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் வேறு எந்த பயனாளியும் இதுகுறித்து இம்மன்றத்தில் புகார் செய்யவில்லை என்பதையும் இம்மன்றம் சுட்டிக்காட்டுகிறது. செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி அவர்கள் அளித்துள்ள அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனுதாரர் அளித்துள்ள புகார்கள் அனைத்தும் ஆதாரமின்றி உள்நோக்கத்துடன் அளிக்கப்பட்டுள்ளவையென இம்முறைமன்ற கருதுவதால், இப்புகார் மனு மீதான மேல்நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைக்கலாமென முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. S. மணிமாறன்,
த/பெ சுப்பிரமணி, 20/10 காஞ்சீபுரம் ரோடு,
பனப்பாக்கம், ராணிப்பேட்டை மாவட்டம்–631 052.

செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி,
ராணிப்பேட்டை மாவட்டம்–631 052.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்